**24.07.2026**

**O.S. No. 117/2024**

வா.த.சா–1.

பெயர் – ராஜலட்சுமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 5ம் பிரதிவாதி என்னுடைய சகோதரர் என்றால் சரிதான். அவருக்கு ராமசாமி என்று மற்றொரு பெயர் உள்ளது என்றால் சரிதான். மற்ற பிரதிவாதிகள் என் சகோதரிகள் என்றால் சரிதான். நானும் என் சகோதரிகளும் பள்ளி படிப்பு படித்துள்ளோம் என்றால் சரிதான். எனக்கும் என் சகோதரிகளுக்கும் திருமணமாகி அவரவர்கள் கணவர் வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என் தம்பி திருமணமாகி பூர்வீக வீட்டில் வசிக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. பேச்சு வார்த்தை கிடையாது. என் சகோதரருடன் நான் கடந்த 31 வருடங்களாக பேசமாட்டடேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் என் சகோதரர் வசம் இருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் என் அப்பா வசம்தான் இருந்தது. நானும் என்னுடைய மற்ற சகோதரிகளும் ஒருமித்து முடிவு செய்துதான் பாகப்பிரிவினை கேட்டுள்ளோம். என் அப்பாவும் சித்தப்பாவும் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் என் அப்பாவுக்கு கிடைத்த சொத்துக்களை பொறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் அப்பா சுயசம்பாத்தியம் மூலம் சொத்துக்கள் வாங்கியிருந்தார் என்றால் அப்படி வாங்கியதாக எனக்கு தெரியவில்லை. என் அப்பாவுக்கு 7 பெண் குழந்தைகள் ஒரு ஆண் குழந்தை என்றால் சரிதான். என் அப்பா பூர்வீக சொத்துக்களை விற்றுள்ளாரா என்றால் ரூபாய் ஐந்தாயிரத்துக்கு அடமானம் வைத்துள்ள ஒரு சொத்து அவர்களுக்கே சென்றுவிட்டது. என் அப்பா கோவிந்தசாமி என்பவருக்கு சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் 5 வருடங்களுக்குள் திருப்பவில்லை என்றால் அவர் கிரையமாக வைத்துக் கொள்ளலாம் என்று எழுதிக்கொடுத்துள்ளார்.

கோவிந்தசாமி என்பவருக்கு விற்ற சொத்தை தாவா 3 ஆவது அட்டவணை சொத்தாக காட்டியுள்ளேன் என்றால் அதுவாக இருக்கும் என்று நினைக்கிறேன். என்னிடம் காட்டப்படும் சர்வே எண். 572/3 க்கு சிட்டா கோவிந்தசாமி வகையறா பெயரில் உள்ளது. கோவிந்தசாமி வகையறாவை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். நானும் என்னுடைய மற்ற சகோதரிகளும் சேர்ந்து திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் மூ.வ.எண். 86/2008 ல் ஒரு வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். நானும் என் சகோதரிகளும் சேர்ந்து கோவிந்தசாமி வகையறா மீது வேடசந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் நாங்கள்தாக்கல் செய்யவில்லை. என் அப்பாதான் அந்த வழக்கை கவனித்து வந்தார். அந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு நோட்டீஸ் அல்லது அழைப்பாணை வந்தா என்று ஞாபகமில்லை. நானும் மற்ற சகோதரிகளும் சேர்ந்து கோவிந்தசாமி வகையறா, என் அப்பா மற்றும் என் சகோதரருக்கு எதிராக வேடசந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. அந்த வழக்கு பற்றிய விபரங்களை பிராதில் கூறியிருந்தால் இந்த வழக்கில் எங்களுக்கு பரிகாரம் எதுவும் கிடைக்காது என்பதால்தான் உண்மை விபரத்தை கூறவில்லை என்றால் சரியல்ல. மூ.வ.எண்.86/2008 வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களை மற்றும் பிராது நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முந்தைய வழக்கு சம்பந்தப்பட்ட விபரங்கள் அந்த பிராதில் இருப்பதால்தான் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அம்மா காலமானபோது என் சகோதரர் வீட்டுக்கு நாங்கள் போனோம் என்றால், பூர்வீக வீட்டுக்கு நாங்கள் போனோம். நாங்கள் எங்கள் அம்மா இறந்தவுடன் ஒற்றுமையாக இருந்தோம் என்றால் சிலகாலம் காரியம் முடியும்வரை அவ்வாறு இருந்தோம். என் அப்பாவின் இறப்பிற்கு நாங்கள் அனைவரும் கலந்து கொண்டீர்களா என்றால் என் அண்ணன் வீட்டுக்கு நாங்கள் செல்லவில்லை. ஒரு பெரிய அக்கா மட்டும் சென்றார்.

என் அப்பா இறந்தபின்னர் நாங்களும் சகோதரர்களும் நல்ல உறவு முறையில் போக வர இருந்தோமா என்றால் இல்லை. ஒரு அக்கா மட்டும் போவார். நானும் என் சகோதரரும் எந்த ஒரு நல்லது கெட்டதுகளில் கலந்து கொண்டது கிடையாது. தாவா சொத்தின் மதிப்பை பிராதில் எந்த அடிப்படையில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் பழைய சொத்து வரியின் அடிப்படையில் உத்தேசமாக போட்டுள்ளோம். தாவா சொத்தின் மதிப்பை காட்டக்கூடிய ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்தோமா என்றால் ஞாபகமில்லை. 2008ம் ஆண்டு தாக்கல் செய்த வழக்கில் நானும், என் சகோதரிகளும் என் அப்பாவும் சுமூகமாக பேசி ஒரு தொகையை நாங்கள் வாங்கிக்கொண்டதால்தான் வழக்கை மேல்நடத்தவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் என் அப்பா உயிரோடு இருக்கும்வரை தாவா சொத்துக்கள் சம்மந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா எங்களுக்கு பணமாக செட்டில்செய்துவிட்டதால் தாவா சொத்தை பொறுத்து என் சகோதரருக்கு ஆதரவாக என் அப்பா செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்த விபரம் எங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்த விபரம் எங்களுக்கு தெரியும் என்பதால்தான் கடந்த 10ஆண்டுகளாக தாவா சொத்தை பொறுத்து எந்த உரிமையும் கோரவில்லை என்றால் சரியல்ல. நானும் மற்ற சகோதரிகளும் தவறான வகையில் தாவா சொத்தை அடையவேண்டி கூட்டாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கடந்த 31 வருடங்களாக தாவா சொத்தை எங்களுக்கு தெரிந்து எங்கள் சகோதரர்தான் தனிப்பட்ட முறையில் அடைந்து அனுபவம் செய்து வருகிறார் என்றும், தாவா சொத்தை பொறுத்து உரிமை கோருவதில் இருந்து நாங்கள் விலகிவிட்டோம் என்றால் சரியல்ல. எங்கள் வழக்கு காலாவதிதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தவறான சொத்து விபரங்களை பிராதில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

அவசியமான மற்றும் தேவையான தரப்பினரை வழககில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள்தாக்கல் செய்துள்ள பிராது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பூர்வீக வீட்டை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அது குடிசை வீடாக இருந்து அது இடிந்துவிட்டது. 2024 ம் ஆண்டு பொங்கல் பண்டிகை சமயத்தில் நானோ என் சகோதரிகளோ, என் சகோதரரை சந்திக்கவில்லை என்றும், அவ்வாறு சந்தித்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.24 16:46:17 +0530

Principal District Judge,
Dindigul.